www.tamilarangam.net

# தேசபக்த முன்னணியினர் கழகம்

# தமிழீழம்.

## PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM

தமிழகத்து

அகதி முகாம்களில் இருக்கும் தமிழீழ அகதிகளே!

மக்களே!

சிறப்பு முகாம்களில் இருக்கும் போராளிகளே!

சிந்தியுங்கள்

வாசிப்போம் தேசபக்தன்

விமர்சிப்போம் தேசபக்தனை

ஒன்றுபடுவோம் தமிழீழ தேசவிடுதலைப் பாதையில்..

இது ஒரு தேசபக்தன் வெளியீடு.

வாசகர்களே! இவ்வெளியீடு மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் உங்கள் கைகளை வந்தடைகிறது. நீங்கள் ஏனைய வாசகர்களது கைகளுக்கு மாற்றி உதவுங்கள்.

பதிப்பு: மக்கள் கலை அச்சகம். தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ராஜீவ் கொலை நிகழ்ச்சியை தொடர்ந்து தமிழீழ மக்களுக்கும் தமிழகத்து மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய இன, மொழி, மானுடம் சார்ந்த மக்கள் உறவுக்கு சுயநல அரசியல் வாதிகளும் அரசுகளும் "வெடிகுண்டு" வைத்து வருகின்றார்கள். இவ் வெடிகுண்டுப் பின்னணியை பற்றி சிந்திப்போம், விழித்தெழுவோம் தமிழக தமிழீழ மக்களுக்கு இடையிலான நல்லுறவை வளர்ப்போம்.**

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் இந்திய நாயகன் ராஜீவ் காந்தி சென்னையில் மே 21 இல் கொலை செய்யப்பட்டார். இவருக்கு கொலைக் கயிறு மாட்டியவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர்களாக இருக்கின்றார்கள், எனக் காட்டி இலங்கை இனவெறி அரசாலும் சிங்கள இராணுவ அழிப்புக்களாலும் எங்கள் நிட்சய வாழ்வை நிரந்தர மண்ணை இழந்து, தமிழகத்து மண்ணில் அகதிகளாக வாழும் எங்கள் மேல் மாநில மத்திய அரசுகள் நிர்ப்பந்தத்தை நெருக்குதலை முடுக்கிவிட்டுள்ளன. போராளிகள் புலிகள் வேறு அகதிகள்வேறு என தங்கள் சுய நலன்களுக்காக கூறிவந்த அரசியல் காவலாளிகளும் அதிகாரகும்பலும் பொய்பேசும் பத்திரிகைகளும் இன்று ஒரே காலில் 'இலங்கை தமிழர்கள் பயங்கரவாதிகள்' என முத்திரை குத்தி வருகின்றனர். தமிழக இந்திய மக்களிடமிருந்து இந்திய மக்களிடமிருந்து இலங்கைத் தமிழர்களை அந்நியப்படுத்தவே இந்த மக்கள் விரோதிகள் குறிவைத்து தாக்குகிறார்கள். மக்களிடம் பய பீதி தன்மையையும் குற்றவாளி மனோபாவத்தையும் வெடிகுண்டு ஆயுதக் காலாச்சாரகாரர்கள் என எங்களை பற்றி வலிந்து ஊட்டி வருகின்றனர். இதன் மூலம் தமிழக தமிழீழ மக்களுக்கு இடையிலான விடுதலை கொள்கை, அனுதாபம், இன மொழி உணர்வு சாந்த நெடிய மக்கள் சக்திக்கு எதிராக இந்த கயவாளிகள் "வெடிகுண்டு" வைத்து வருகின்றார்கள் இதில் சிறிது வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

இந்திய மத்தியரசு அகதிகளாகிய எம்மை இனவெறி அழிப்பில் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இலங்கை அரசிடம் ஒப்படைத்து அழிக்க முயற்சிகளும் செய்து வருகிறது. தமிழகத்தில் நாங்கள் இருக்கும் வரை உணவிலிருந்து உயிர் பாதுகாப்புவரை உத்தரவாதமும் இல்லாத நிர்ப்பந்த சூழ்நிலையை மாநில அரசு கொடுத்து வருகிறது. எந்த மனித நேயமும் இல்லாத சர்வதேச அகதிகள் நலனை மீறி வரும் இவ்வரசுகளின் நடவடிக்கைகளுக்கு எந்தவகை அரசியல் காரர்களிடமிருந்தும் இதுவரை எதிர்ப்புக் குரல் இன்றியே இந்த தீயவர்களின் வெற்றி சாதிக்கப்படுகிறது. பாசாங்கு அரசியல் வாதிகளிடமிருந்து அகதிகள் இனியும் எப்படி எதிர்பார்க்க முடியும் இதை. இந்திராகாந்தி கொலையுண்ட போது ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் அழிக்கப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டது. அதே போல் ராஜீவ் கொலையின் விளைவாக தமிழீழ மக்கள் அவ்வளவு மனித அழிவையும் சொத்து இழப்பையும் சந்திக்கவில்லை என்பது உண்மைதான். இதற்கு காரணம் அகதிகள் மேல் இருக்கும் மக்களின் அனுதாப ஆதரவும், தமிழகத்து மக்களுக்கு இருக்கும் ஏகோபித்த இன உணர்வும் தமிழீழத்தில் ராஜீவ் கட்டளையின் பேரில்

www.tamilarangam.net

அமைதிப்படை? நடாத்திய ஆட்டூளியங்களின் நினைவுகள் நெஞ்சில் இருப்பதும் உணர்வுள்ளவர்கள் ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து நடாத்திய கிளர்ச்சிகளில் ராஜீவ் முகம் மறைக்கப்படாது இருப்பதும் அடிப்படையில் தமிழீழ மக்களின் தேசியவிடுதலைக்கான போராட்டத்தின் நியாயமும் தேவையும் குறிப்பிடும்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுமாகும். தமிழகத்து மக்களின் வாழ்வில் மாநிலத்தின் உரிமைகள் மத்தியரசுகளால் நசுக்கப்படுவதும், இந்திமொழி திணிப்புக்கெதிரான தமிழ் தேசிய உணர்வும், ராஜீவ் காலத்து மகாபீரங்கி ஊழல் கொள்ளையும் சேர்த்து ராஜீவ் கொலை மீது பெரும் இழப்புணர்வுத்தாக்கத்தை தமிழக மக்களிடம் ஏற்படுத்த வில்லை. தமிழீழ அகதிகள் மேல் சீற்றங் கொள்ள வைக்கவில்லை.

ராஜீவ் கொலைச் செய்தி கேட்ட சீக்கியர்கள் தங்கள் வீடுகளை விட்டு தெருவுக்கு வராது பூட்டிக் கொண்டிருந்தவேளை, சூறையாடுவதற்கு சொத்துக்கள் இல்லாத அகதிகளாகிய நாம் மனித இழப்பைக் கூட ஒற்றை எண்களுக்கு அப்பால் தாண்டாத காரணம் தமிழக மக்களிடம் இருந்த நல்ல அடிப்படை உணர்வுகள்தான் என்பதை மறக்கக் கூடாது. இதற்கு நூறு முறை நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம் தமிழக மக்களுக்கு. வேதனையான மறுபக்கம் ஒன்றையும் சொல்ல விரும்புகிறோம். தன் இனத்தை அழித்தும், காட்டிக் கொடுத்தும், மாநில உரிமைகளை அடகுவைத்தும் ஆட்சிக்கு வருவதில் குறியாக இருக்கும் கட்சிகளும் அரசியல் பேடிகளும் திட்டமிட்டு தேர்தல் இலாபத்திற்காக இட்ட கூக்குரல்களும், சாதித்த மவுனங்களும் மறக்க முடியாதவை. கொலையைக் காட்டி மக்கள் உணர்ச்சியை தூண்டினர். தொண்டுள்ளங்களின் உணர்ச்சியை பயன்படுத்தி வட்டத்து ரவுடி அரசியல் தலைகள் தமக்கு வாய்ப்பான இடங்களில் அகதி முகாங்களை தாக்கினர்; தீ வைத்தனர். அகதிப் பெண்களை பாலியல் வன்முறைக்கு அழைத்தனர். தர்மபுரியில் இருவர் சாகடித்து குளத்தில் போடப்பட்டனர். தென்னூர்க்காடு மாவட்டத்தில் முகாமின் 12 குடிசைகள் எரிக்கப்பட்டன. திருத்துறைப்பூண்டி அகதி முகாமை குண்டர் படையுடன் காக்கிச் சட்டை காவல்காரர்களும் சேர்ந்து தாக்கினர். புளியம் பட்டியில் உழைப்புக்கும் உணவு வாங்கவும் வெளியில் சென்ற அகதிகள்தாக்கப்பட்டனர். பல முகாம்களில் மலிவு மது கொடுத்து கம்பு, பொல்லுகளுடன் லொறியில் வந்த அராஜக கூட்டம் தாக்கியது. ரவுடி அரசியல் கும்பலின் அட்டகாசம் வெற்றியளித்தது சில மணி நேரங்கள் தான். ஒரு இனவெறி அரசுக்கும் இராணுவத்திற்கும் எதிராக யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் தமிழீழ தேசத்தின் அகதிகளாகிய எங்களிடம் சில நிமிடங்கள் தான் அவர்களின் ரவுடித்தனமும் ஆண்மைத்தனத்தின் கொடூரமும் வெளிப்படுத்த முடிந்தது அகதியும் மனிதன்தானே அவனுக்கும் உணர்வுகள் உண்டு தானே. பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? சில முகாம்களில் அரசியல் குண்டர் கூட்டத்தின் அடுத்த நடவடிக்கைகளை எதிர்பார்த்து ஆண் பெண் அகதிகள் தற்பாதுகாப்புக்க தயாராக இருந்தனர். நினைத்தபடியே லொறிகளில் வந்த குண்டர் படையின் கொக்கரிப்பு பயமுறுத்தலுக்கு பதிலாக தமிழீழ அகதிகள் தங்கள் மொழியில் துப்பாக்கி தோட்டா வெடிகுண்டு என முழங்கி அச்சுறத்தியதும் வந்தபடை வந்த வழியே கம்பு காட்டி கால் தடுக்க தலைதெறித்து ஓடியது. இது அகதிகள் தற்பாதுகாப்பு வார்த்தைகளுக்கு கிடைத்த பலனாகும்.

இந்திராவின் கொலையை ஒட்டி சீக்கியர்களின் வாழ்வின் ஏற்பட்ட துயரம் ராஜீவ் கொலையின் பின் குறிப்பிடட எந்த தேசிய இன பிரிவு மக்களின் மேலும் நடக்கவில்லை என நிம்மதி மூச்சுவிடும் இந்திய

ஜனநாயக அறிவியலாளர் கூட்டம் தேர்தல் கட்சிகளின் சொத்துக்கள் நன்றாக தாக்கப்பட்டதை நல்லபடியே நினைவு கூர்கின்றனர். ஆனால் அகதிகள் மேல் நடாத்தப்பட்ட அக்கிரமங்களை முகாம்களை அடித்து கொழுத்திய காட்சிகளை யாரும் கண்டு கொள்ளவில்லை. சர்வதேச மனித உரிமைகள் பற்றி பேசுபவர்கள் உட்பட அரசியல் ஆதாயத்துக்காகவேனும் கண்டனம் வேண்டாம். அனுதாபம் கூட தெரிவிக்க வில்லை. அமைதிப்படையின் ஆக்கிரமிப்பு செயல்களை எதிர்த்து அரசியல் இலாபத்திற்காக குரல் விட்ட கட்சிகள் அப்படைக்கு அரசியல் தலைமை கொடுத்து ராஜீவ் கொலையின் சோகத்தில் துக்கத்தில் அகதிகள் மேல் நடாத்தப்பட்ட மனிதப்பண்பற்ற செயல்களுக்கு குரல்கொடுக்க நாதியின்றி நிற்கும் சோக வேடிக்கைதான் உலகத்திலேயே பெரிய இந்திய ஜனநாயகம்? பற்றிப் பேசும் அனைவருக்கும் உண்மை சொருபத்தை தமிழீழ அகதிகளுக்கும்சர்வதேச அகதிகளுக்கும் இனம் காட்டி நிற்கின்றது.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து தமிழீழ அகதிகள் மீது நடத்தப்பட்ட நேரடி வன்முறைகள் இந்தியச் சட்டத்தில் இல்லாத அரசு அதிகாரிகள் நேரடியாக தலைமை தாங்காதவை தான், ஆனால் சட்டத்தை உருவாக்கும் அரசியல் வாதிகள் சிலர் பின்னணியில் இருந்தார்கள். அகதிகளாக தமிழக மண்ணுள் காலடி எடுத்து வைத்தபோதே எம்மைப்பற்றிய எல்லா உண்மைத்தகவல்களையும் கொடுத்து பதிவு செய்து வீட்டுக்கு ஒரு பொறுப்பானவர் புகைப்படம் ஒட்டியும் கொடுத்து அகதி அட்டை பெற்ற நாங்கள் இந்தியரசின் அகதிகள் சட்டத்திற்கு? உள்பட்டு நீதி நேர்மையுடன் வாழ்ந்து வந்தோம். உணவு, உடை, உறையுள் என ஆயிரம் கஸ்டங்கள் எம் வாழ்வில் மோதிய போதும் நெருக்கடியற்ற உயிர்வாழ்வுக்குள்ள உத்தரவாதத்தை எண்ணிக் கொண்டு முகாம்களுக்கு வெளியே சென்று தமிழகத்தில் ஒரு கூலிக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட குறைந்த கூலிக்கு வேலை செய்து உடல் உழைத்து வயிற்றைக் கழுவி வந்தோம். வாழ்க்கையை தள்ளி வந்தோம். எங்கள் அகதி வாழ்வின் மீது ராஜீவ் கொலையைக் காட்டி அரசியல் நடாத்தி அரசாள்பவர்களின் பொய்ப்பிரச்சாரத்தால் அகதிப்பெண் ஒவ்வொன்றும் சுபாவாகவும் அகதி ஆண்கள் சிவராசன்களாகவும் பார்க்கப்பட்டு வருகின்றோம் எங்களுக்கு அகதி முகாமை விட்டு வெளிக்காற்றை சுவாசிக்கு சுதந்திரம் இல்லை. உழைத்து வாழ உரிமை மறுக்கப்படுகிறது. வேலை கொடுக்க பெரியமனிதர்? பயங்கொள்கின்றனர். செய்த வேலைக்கு கூலி இல்லையென்று விரட்டுகின்றனர். அவர்களது (பலவீனமான) சட்டம் ஒழுங்கை அகதிகள் மீறுவதாகவும் எங்கள் மீது தூற்றுகின்றனர்.

எங்களுக்கு தஞ்சம் அளித்த தமிழக அகதிகளை அரசினதும் அரசியல் வாதிகளினதும் அறிக்கைகளும் அதிகார வர்க்கதினதும் காக்கிச் சட்டைகளினதும் அச்சுறுத்தல்கள் அஞ்சி நடுங்க வைக்கிறது மக்களை. தமிழீழ அகதிகளைப் பற்றி கூடிப்பேசவோ உணவுக்கு மருந்துக்கு உதவவோ முடியாது தவிக்கின்றனர். அரசும் அரசியல் வாதிகளும் தங்களுக்குத் தேவைப்பட்டபோது தமிழ் மக்களுக்கு உதவும்படி விட்ட பழைய அறிக்கைகளையும் அதிகார வர்க்கம் செய்த அனுசரணைகளையும் நினைத்து அரசியல் வாதிகளின் பொய் முகங்களை கண்டு வருகின்றனர். தமிழீழ மக்களின் விடுதலைக்கு குரல் கொடுத்த தமிழக மக்கள் தங்களது கைகளில் உள்ள விலங்குகள் சுதந்திரம் பற்றியும் சிந்திக்க வேண்டிய தேவையை இன்றைய சூழல் அவர்களுக்கு வழங்கியிருக்கின்றது.

அகதிகள் உரிமைச் சட்டம்? பற்றிய இந்திய வரையறைகளையும் மீறி மனித உரிமைகள், அகதிகள் நலன் இவற்றைக் காலில்போட்டு மிதித்துக் கொண்டு இந்தியக் காவல் துறையும் உளவுத் துறையும் தலையை விட்டு விட்டு வாலைப்பிடிக்க அல்லது எச்சத்தைப் பார்க்க அகதிகள் மீது சோதனை நடாத்துகிறது. சோதனைகளின்போது எங்களது உணர்வுகளும் கீழ்தரமாக சோதிக்கப்படுகிறது. இந்த ஒரு வெடிகுண்டுப் பெண்ணுக்கு அடையாளம்கான ஆயிரமாயிரம் அகதிப் பெண்களின் புகைப்படத்தை சட்டத்தின் துணை கொண்டு சர்வதேச அகதிகளின் நலனை உரிமையை மீறுகின்ற வகையில் உருவ அடையாளத்தை அகதிகளிடமிருந்து பறித்துக் கொண்டிருக்கிறார்கள். காலையும் மாலையும் கையெழுத்துப் போட்டு வாழநிர்ப்பந்திக்கிறார்கள். ராஜீவ் கொலைக்காக ஜாமீனில் விடப்பட்டிருக்கும் லட்சம் அகதிகளாகிய நாங்கள் வாழ்கிறோம். 12 வயதில் இருந்து 40 வயதான ஆண் பெண் அகதிகள் புகைப்படங்கள் எடுக்கப்பட்டும் அனைவரதும் கைரேகைகள் பதிவு செய்யப்பட்டும் உள்ளது. இவை எதை காட்டுகிறது? ராஜீவ் கொலையைக் காட்டி அகதிகள் மீது நெருக்குதலும் நிர்ப்பந்தங்களும் கொண்டிருப்பதைத்தான். சர்வதேச அகதிகள் நலனை, உரிமையை இந்திய அகதிகள் சட்டம்? மீறியுள்ளது என்பதைத்தான். இலங்கை இனவெறி அரசுக்கு தமிழீழ அகதிகளிடமிருந்து எடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தையும் இந்திய மத்திய அரசு கொடுத்துவிட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த இனவெறி அரசுக்கு இந்தியரசு தமிழீழ அகதிகளையும் கூட காட்டிக் கொடுக்க தொடங்கியுள்ளது.

ராஜீவ் கொலைக்குப் பின் இந்திய ஜனநாயகத்தின் பத்திரிகை துறைக்காவளர்களின் தலைகீழான மாற்றம் பற்றியும் கொஞ்சம் சந்திக்கின்றோம் அறிவு குறைந்தவர்களால் கணிப்பிடப்படும் அகதிகள், 1983ல் இருந்து தமிழீழ போராட்டத்தின் நியாயம் பற்றி தமது பார்வையில் எழுதியும், தமிழீழ மக்கள் சந்தித்து வரும் கொடுமைகள் குறித்து புகைப்படங்களாகவும் செய்திகளாகவும் வெளியிட்டு வந்த பத்திரிகைகள், 1987க்குப் பின் பெரிய பத்திரிகைகள் தங்கள் பாதையை அப்படியே எழுதிய போதும், நடுத்தர, சிறிய மற்றும் தமிழ் பத்திரிகைகள் போராட்டகளத்தின் உண்மை நிலைமைகளையும் நிர்க்கதியான மக்களது வாழ்நிலைப் படங்களையும் பிரசுரித்து வந்துள்ளன. எப்போதும் அகதிகள் நலன்பற்றி நிறையவே எழுதிவந்தன. ஆனால் ராஜீவ் கொலையின் சோகம் அவர்களையும் விட்டு வைக்கவில்லை. அந்த ஒரு வாரத்து சோகத்தை தமது பக்கங்களில் நிரப்பி காட்டுகின்ற அளவுக்கு லட்சோபலட்சம் அகதி மக்களின் உத்தரவாதமில்லாத சோகம் கொண்ட வாழ்கை பற்றியும் எதிர்கால கேள்வி பற்றியும் அவர்களது பேனா ஜனநாயகத்துடன் எழுத மறுக்கின்றது. அகதிகளின் எரிந்த வீடுகளை, தாக்கப்பட்ட அகதிகளை அவர்களது ஜனநாயக புகைப்பட கருவிகள் படம் பிடிக்க கூட மறுக்கின்றன. இப்போதுதான் இப்பத்திரிகைகளின் பத்திரிகைத்தர்மம் யாரின் நலனுக்காக நிற்கிறது என சிந்திக்க வைத்துள்ளது.

ராஜீவ் கொலையில் தமிழீழ இயக்கங்களின் பங்கும் பார்வையும் தமிழ் மக்களது போராட்ட வரலாற்றில் அகதிகள் ஒரு சோகமான காலத்தை தாண்ட வேண்டி இருப்பதைக் காட்டுகிறது. ராஜீவ் கொலையில் புலிகள் கடைசிப் பாத்திரமான தீர்த்துக் கட்டும் வேலைக்கு பொறுப்பாக இருந்துள்ளார்கள். (அப்படியானால் ராஜீவ் கொலையில் சில அரசுகளும், உளவு நிறுவனங்களும் முதல் பாத்திரத்தை செய்திருப்பதாக பொருள் கொள்ளலாமா?) என்பதை இதுவரையான கைதுகள், புலிகளின் பேச்சுக்கள் தெரிவிக்கின்ற போதும் உறுதி செய்யப்படவில்லை என்பது ஒருவகை ராஜீவ் கொலையைத் தொடர்ந்து மற்ற இயக்கத் தலைமைகள்

www.tamilarangam.net

நான் நீ என போட்டி போட்டுக் கொண்டு ராஜீவ் கொலையின் யமன்களைப் பிடிக்க எல்லா முயற்சிகளிலும் அரசுகளுக்கு உதவுகிறார்கள். இலங்கை சிறைகளில் இருந்த, மாலைதீவு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியின் 40 PLOT கைதிப் போராளிகள் இந்தியா இலங்கை அரசுகளால் ஆயுதம் கொடுக்கப்பட்டு PLOT தலைமை வழிகாட்டலில் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு யமன்களைத் தேட வவுனியாவிற்கு சென்றிருக்கின்றார்கள். ராஜீவுக்கு அஞ்சலி செலுத்துவதிலும் அவரது கனவான இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நனவாக்குவதிலும் உறுதி எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழீழ அகிம்சை ஆயுதத் தலைமைகள் எதுவும் தமிழீழ அகதிகளாகிய எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் நிர்ப்பந்தங்கள் பாதிப்புகள் தொடர்பாக நன்றாக தெரிந்திருந்தும் வாய்திறக்காதுள்ளனர். இது இனியும் பழைய இயக்கத் தலைமைகளை அகதிகள் நம்பக் கூடாது என்பதை தெட்டத்தெளிவாக காட்டுகிறது. ஆரம்ப காலங்களில் இருந்து ஏட்டிக்குப் போட்டியாகவும் ஒருவரை மற்றவர் அழிப்பதிலும் உறுதி பூண்ட இந்த சுயநலத் தலைமைகள், அதிகார ஆசை தலைவர்கள் மாறி மாறி நூற்றுக்கணக்கான போராளிகளை கொன்றுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்களை காயடித்து களத்தில் இருந்து அந்நியப்படுத்தினர். தலைமைகளால் பாவிக்கப்பட்ட அப்பாவி போராளிகள் இன்று சிறப்பு முகாம் அகதிகளாக காலத்தை ஓட்டி வருகின்றனர். இவர்கள் தமது கடந்த கால பாதையையும் கொள்கையற்ற தலைவர்களுக்குப்பின்னால் ஆயுதக் கவர்ச்சியில் செய்த தவறுகளையும் சுய ஆய்வுக்கு உட்படுத்தி வருகிறார்கள். சரியான தேசிய விடுதலைப் பாதையை நோக்கி திரும்புகிறார்கள்.

அகதிகளாகிய எமது கேள்வி என்னவென்றால் ராஜீவ் மரணம் எந்த விதத்திலும் தமிழீழ மக்களின் பொது அரசியல் வாழ்வுக்கோ, தனிப்பட்ட குடும்ப வாழ்வுக்கோ இழப்பல்ல. இந்த ராஜீவ் ஆட்சியில்தான் இந்தியப் படைகள் எமது மண்ணில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று குவித்தது. பல பெண்களை பாலியல் பலாத்காரத்திற்கு உள்படுத்தியது. லட்சம் குடும்பங்களை நடு வீதிக்கு தள்ளியது. அமைதியின் பெயரால் இரத்தத்தில் தோய்ந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தமிழீழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் தடைக்ககல்லாக துரோக ஒப்பந்தமாகவே பார்க்கிறார்கள். ஏன் இந்த துரோகத் தலைமைகள் இரத்தம் தோய்ந்த இந்த ஒப்பந்தத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டுள்ளார்கள்? புலிகளின் தனி இயக்க சர்வதிகாரம், சகஇயக்க அழிப்பு மக்கள் சக்தியுடன் முறியடிக்க முடியாத இத் தலைமைகள், புலிகளுக்கு எதிரான எந்த பிற்போக்கு அரசுகளுடனும் மக்கள் விரோதிகளுடனும் சேரலாம் என்ற முடிவை எடுக்க வைத்த அரசியல் இராணுவ காரணம் தான் இத் தலைமைகள் மக்களை உண்மையாக நேசித்த மக்களை சார்ந்திருக்கவில்லை நம்பவில்லை என்பது தான் உண்மை.

புலிகளோ எந்த அரசுகளுடனும் தமக்கு தேவைப்படும்போது தேன்நிலவு பேச்சுவார்த்தையும் தேவையானால் யுத்தமும் தமிழீழ மக்களின் நலன் என்ற பெயரால் நடத்துகிறார்கள். மற்றைய இயக்கங்களையும் போராளிகளையும் கோராத்தனமாக அழித்துவிட்டு பல காரணங்கள் கூறுவார்கள் புலிகளின் தனி இயக்க அதிகார வெற்றியும் மக்கள் விரோதத்தன்மையும் போராட்டங்களின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டு வருகிறது. மிக அண்மைக்காலத்தில் மக்கள் நலனிற்காக சிந்திக்கின்ற முற்போக்கு எண்ணம் கொண்ட "தீப்பொறி" குழுவின் 5க்கும் மேற்பட்ட முக்கிய தோழர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள்.

www.tamilarangam.net

கொலே செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது. புலிகளின் யுத்தமுறை மக்களின் விடுதலேயை சாதிக்கக் கூடியதல்ல என்பது ஒவ்வொரு யுத்த நடவடிக்கைகளிலும் தெளிவுபடுத்தி வருகின்றது. மக்களே காக்க முடியாத நிலேயை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. புலிகளின் தலேமை தமது தவறுகளே சிந்திக்க மறுப்பது ஏன்? விடாக்கொண்டன்களாக இரத்தம் தோய்ந்த தோல்விகளுக்காக மக்களேயும் இளஞ்சிறுர்களேயும் நிர்ப்பந்திப்பது ஏன்? தவருன யுத்த முறையால் அடுத்த சந்ததியே அழிந்த பின் எப்படி சுதந்திரம்? யாருக்கு தமிழீழம்? என்ற கேள்விகள் எங்களே சிந்திக்க வைக்கின்றது. இந்தியரசு ஆதரவு இந்திய மக்கள் எதிர்ப்பு, இந்தியரசு எதிர்ப்பு இந்திய மக்கள் ஆதரவு என இரண்டு பாதைகள் நிலவவே செய்யும். ஒரு சரியான மக்கள் பாதை மலரும் வரையில் இலங்கையில்.

1987 ஒப்பந்தத்தின் போது அகதி வாழ்வில் பெரும் அமைதி வந்து விட்டதாக நினேத்து தமிழீழம் சென்ற எங்கள் பலரது அமைதியை இந்தியப்படைகளும் புலிகளும் யுத்தத்திஞல் திசைமாற்றினர். யுத்தத்தில் இலங்கைப் படைகளுக்கு கொஞ்சமும் குறைந்ததல்ல இந்தியப்படை என்பதை தமிழீழ மக்களுக்கு நிருபித்துவிட்டு இந்தியப் படை திரும்பியது. புலிகள் இலங்கை அரசு தேனிலவு முடிந்து யுத்தம் தொடங்கியது. இந்த இரண்டு யுத்தங்களிலும் மேலும்பல புதிய அகதிகளுடன் மீண்டும் தமிழகம் வந்தோம். இந்த காலங்களில் அகதிகள் வாழ்வில் புது சரிதம் ஒன்றையும் எழுதியது இயக்கத் தலேமைகள் கூட தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக தமது இயக்கங்கள் மீது மங்கிய சர்வதேச அனுதாபத்தை புத்துயிர்ப்பிக்க இந்திய அரசின் பார்வையை மீண்டும் திருப்ப இந்தியாவிக்கு அகதிகளாக செல்ல உதவி புரிந்து கூட்டிச் சென்றனர். மறைமுக நிர்ப்பந்தங்களே கொடுத்தனர். வேறு ஒரு தருணத்தில் தமது இயக்க கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் விமானப்படையின் குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிருக்காக வழியின்றி கடலில் கிளம்பியபோது தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் பற்றிய உண்மை நிலேயை மறைக்கவும், தமது இயக்கத்திற்கு தேவையான மனிதபலத்தை நிவர்த்திக்கவும் நடுக்கடலில் வழிமறித்து "அகதிகளாக செல்ல முடியாது வாருங்கள் வந்து சாவுங்கள்" என மிரட்டி அழைத்துச் சென்றதையும் நாங்கள் மறக்க முடியுமா? நமது அகதி வாழ்வு இயக்கத் தலேமைகளின் கைகளிலும் பகடைக் காயாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்படியாக இயக்கத்தலேமைகளின் குறுகிய கண்ணோட்டம் கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் எதிரிகளால் தமிழீழ சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை களங்கப்படுத்தவும் போராளிகளேயும் அகதிகளேயும் தமிழக இந்திய மக்களிடமிருந்து அன்னியப்படுத்த பேருதவி புரிந்து வருகின்றது. புலிகளின் பசப்புக் கதையளப்பும் ராஜீவ் கொலேக்குப் பின் அம்பலப்பட்டிருக்கின்றது. இந்திய மண்ணில் புலிகள் அகிம்சைவாதிகள் என்ற சீல் உடைக்கப்பட்டுள்ளது. தமிழீழப் போராளிகளுக்கும் தமிழக இந்திய மக்களுக்கும் இடையிலான உறவில் பெரும் இடைவெளியை இயக்கத் தலேமைகளின் தவருன நடவடிக்கைகளும் இந்திய கயவாளி அரசியல் வாதிகளின் பிரச்சாரங்களும் அரசு இயந்திர நடவடிக்கைகளும் செய்து கொண்டிருந்த போது ராஜீவ் கொலேயின் பின்புலங்களே பயன்படுத்தி தமிழீழ மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையிலான நீண்ட உறவின் பினேப்பை அறுக்க எதிரிகள் கடும் முயற்சி எடுத்து வருகிருர்கள் என்பதே இன்றைய கடைசி நிலவரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனி நாங்கள் அகதி வாழ்வை மாற்றப் போராடப் போகிறோம்,
தமிழக மக்களே உங்கள் தார்மீக ஆதரவை தாருங்கள்.

* அகதிகளே! தமிழக இந்திய மக்களுக்கு எங்களது இனறைய துயர நிலையை புரிய வைப்போம். மக்களுக்கு இடையிலான உறவை வளர்ப்போம்.

* தமிழக இந்திய மக்களே! ஒட்டுப்பொறுக்கி அரசியல் வாதிகளும், கட்சிகளும், வால்பிடிக்கும் பத்திரிகைகளும் எங்கள் மேல் கிளப்பி விடும் பொய்புரட்டுகளை பயபீதியை நம்பாதீர்கள், நியாயத்துடன் சிந்தியுங்கள்.

* தமிழக மக்களே! எங்களை இலங்கை இன வெறியரசிடம் ஒப்படைக்கும்போது மாநில மத்திய அரசுகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துங்கள்.

* வெளிநாடுகளில் வாழும் தமிழ் அகதிகளே! உலகநாடுகளில் உள்ள அகதிகளுக்கும், மக்களுக்கும் எங்கள் நிலையை தெரிவியுங்கள், உறவைத் தொடருங்கள்.

* எங்கள் அகதிவாழ்விற்கு முற்றுப்புள்ளி வைக்க இலங்கை அரசின் இன அழிப்புக்கு எதிராகவும் இயக்கத்தலைமைகளின் அராஜகத்திற்கு எதிராகவும் தேசபக்தப் போராட்டத்தில் பங்கு கொள்ளப்போகிறோம்.

* தமிழீழ அகதிகளே! எங்கள் சுதந்திர வாழ்வுக்காக நாங்கள் ஒன்றுபடுவோம். புது வழிகாண்போம்.

வெளியீடு: தேசபக்த முன்னணியினர் கழகம் தமிழீழம்.
PATRIOTIC VANGUARD'S ORGANAZATION OF THAMILEELAM



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்